செய்தி வெளியீடு எண்.181 நாள்.03.04.2017

# திருவள்ளூர் மாவட்டம், விளையாட்டு விடுதிகளில் மாணவ-மாணவியர்களுக்கான சேர்க்கை நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~~~~~

விளையாட்டு மேம்பாடு மற்றும் இளைஞர் நலத் துறையின் கீழ் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் புரிவதற்கு ஏற்ப நல்ல பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் மற்றும் விளையாட்டு பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி** - மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், கடலூர், தஞ்சாவூர், அரியலூர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், உதகமண்டலம், விழுப்புரம், சென்னை, நெய்வேலி, மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி** - ஈரோடு, திருவண்ணாமலை, நாமக்கல், திண்டுக்கல், நாகர்கோவில், பெரம்பலூர், தேனி, புதுக்கோட்டை, தருமபுரி, சென்னை மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேற்காணும் விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுகளில் பயிற்சி பெற்ற சிறந்த விளையாட்டு வீரராக விளங்குவதற்கு 7-ம் வகுப்பு, 8-ம்வகுப்பு, 9-ம் வகுப்பு மற்றும் 11-ம் வகுப்பு சேர்க்கைக்கான மாவட்ட அளவிலான தேர்வு வரும் 02.05.2017 முதல் 04.05.2017 வரை நடைபெற உள்ளது.

**மாணவர்**

1.தடகளம் 2.இறகுப்பந்து 3. கூடைப்பந்து 4. குத்துச்சண்டை 5. கிரிக்கெட் 6. கால்பந்து 7. வாள்சண்டை 8.ஜிம்னாஸ்டிக்ஸ் 9. கைப்பந்து 10.ஹாக்கி 11. நீச்சல் 12. டேக்வோண்டோ 13. வாலலிபால் 14. பளுதூக்குதல் 15. கபாடி, 16. மேசைப்பந்து 17. டென்னிஸ் 18. ஜுடோ 19. ஸ்குவாஷ் மற்றும் 20. வில்வித்தை

**மாணவியர்**

1.தடகளம் 2. இறகுப்பந்து 3. கூடைப்பந்து 4. குத்துச்சண்டை 5. கால்பந்து 6. வாள்சண்டை 7. கைப்பந்து 8.ஹாக்கி 9. நீச்சல் 10. டேக்வோண்டோ 11. வாலிபால் 12. பளுதூக்குதல் 13. கபாடி 14. டென்னிஸ் மற்றும் 15. ஜுடோ

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் கொண்டுள்ள மாணவ / மாணவியர் அதற்கான உரிய படிவங்களை மார்ச் 22.03.2017 ஆம் தேதி முதல் அனைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், திருவள்ளுா அவர்களை அணுகி இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 2017-2018 ஆம் ஆண்டு சேர்க்கைக்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்திடவும், விளையாட்டு விடுதி தொடர்பான விவரங்களை **www.sdat.tn.gov.in** என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, திருவள்ளுர் மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலா் அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். 20.04.2017 என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~~~~~